DEPOSITION OF THE WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**Case no: CC.No. 05/2015**
**prosecution witness: Pw 6**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**Accused absent, 317 petition filed.**

வாக்குமூலம்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
வழக்கு எண்.C.No./20

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விஜய் பிரசாத் | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**05.05.2023**
முதல் விசாரணை:

1. நான் திருச்சியில் வசித்து வருகிறேன். ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது அப்பா ஆவார். வழக்கின் எதிரியை நான் ஒரு பார்த்திருக்கிறேன். கடந்த 11.02.2015-ம் தேதி இரவு 7 மணியளவில் எஸ் எஸ் கிராண்ட ஹோட்டல் அறை எண்.106ல் நானும், என் அப்பா, அம்மா, தங்கை, பாட்டி மற்றும் எனது தங்கையின் மகன் ஆகியோர் தங்கி இருந்தோம். காலையில் எழுந்து பார்த்த போது நாங்கள் வைத்திருந்த நகை பையை காணவில்லை.

2. ஹோட்டல் மேலாளரிடம் புகார் தெரிவித்தோம். அதன்பின்னர் என் அப்பா காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். அதன்பின்னர் வழக்கின் எதிரியிடமிருந்து போலீசார் நகையை கைப்பற்றியதாக விபரம் சொன்னார்கள். அதன் பேரில் எதிரியை நான் காவல் நிலையத்தில் பார்த்தேன். நகையை என் அப்பா வந்து வாங்கிசென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. போலீசார் என்னை எங்கு வைத்து, எப்போது விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து 12.02.2015ம் தேதி, மதிய வேளையில் விசாரித்தார்கள். அந்த நேரத்தில் கலவு போன நகைகள் எதுவும் கிடைக்கவில்லை என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரியை ஒரு முறை பார்த்தேன் என்று சொல்லுவதில் எங்கு வைத்து, எப்போது பார்த்தேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன்.

2. எனது தாயார் ரிசப்சனில் நகை பையை வைத்துவிட்டு சென்றுவிட்டார், பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து எனது நகையை எனது தகப்பனார் வசம் ஒப்படைக்கப்பட்டது எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.